# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2020–ம் வருடம் மார்ச் மாதம் 27–ம் தேதி காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும் அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ. 2,00,000/- க்கும், மேற்படி செலவுத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், மேலும் அவசர அவசியம் கருதி அரசு சாந்த நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் திருச்சிராப்பள்ளி கூட்டுறவு நிறுவனத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோகம் உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது

அ.கு:- போர்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள தேவையான உபகரணங்கள் விநியோகம் செய்ய தோராய செலவினம் மற்றும் விநியோக உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(அ2/246'/2020)

**மன்றத் தீர்மானம் எண்.1612**

அனுமதிக்கப்படுகிறது.

2) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகனம் எண். TN75B4577 (TATA ACE) வாகனமானது நகராட்சிப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை எடுக்கும் பணி மேற்கொள்ளும் போது வாகனம் இயங்காமல் பழுது ஏற்பட்டது. அதனை அவசர அவசியம் கருதி உள்ளூர் ஒர்க்ஸ் ஷாப்பில் சரி செய்தமைக்குரிய தொகையானது திரு. மது ஓட்டுநரின் சொந்த செலவில் மேற்கொள்ளப்பட்டது. எனவே செலவு செய்த தொகை ரூ.800/-னை அன்னாரின் பெயரில் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**மன்றத் தீர்மானம் எண்.1613**

அனுமதிக்கப்படுகிறது.

3)இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டு பகுதிகளுக்கும் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் மின் மோட்டார்கள் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பகிர்மான குழாய் (ம) மின் மோட்டார்கள் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் செலவினத்தினை நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 293/2020/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1614**

மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது.

4) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக போர்க்கால அடிப்படையில் இந்நகராட்சி துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் (ம) நோய் தடுப்பு கிருமி நாசினிகள் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்கள்/துறைகளில் வாங்குவதற்கும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.500000/-(ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மேற்படி தொகையினை கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை ந.க.எண்.. 3336/ஜெ2/2020-4 நாள் 23/03/2020 வரப்பெற்ற நிதியிலிருந்து வழங்கவும் அதிகமான செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவுதலை தடுக்கும் பொருட்டு அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.1615**

COVID-19 –சிறப்பினம் – அரசு நிதி ஒதுக்கீடு தொகையினை செலவினங்களுக்கு முழுமையாக பயன்படுத்திடவும் மிகை செலவினங்களை வருவாய் நிதியிலிருந்து முன்பணமாக அனுமதித்தும், மிகை செலவினங்களை எதிர்நோக்கும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டிலிருந்து சரி கட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

5) இந்நகராட்சி 2020-2021-ம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண்.303/2020/பி1)

**மன்றத் தீர்மானம் எண்.1616**

வரவு செலவு திட்ட மதிப்பீடு பரிசீலித்து அங்கீகரிக்கப்பட்டது.

6)இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் விபரப்படி உள்ள வங்கிகளுக்கு தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்ட தொழில்வரி தொகையினை வசூல் செய்ய இயலாத காரணத்தினால் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.204, நாள் 22/10/2012-ல் தொகையினை வஜா செய்தும் வரி விதிப்பு எண்ணை ரத்து செய்தும் ஒப்புதல் வழங்கியுள்ளது. எனவே கீழ் கண்ட வரிவிதிப்பு எண் மற்றும் தொகையினை நீக்கம் செய்யப்படாத்தினால் நாளது தேதி வரை கேட்பு எழுப்பப்பட்டு வருவதால் கேட்பு

தொகை ரூ. 153680/- வஜா செய்யவும், வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>வஜா (Write Off) செய்ய வேண்டிய இனங்களின் விபரம்</u>**

| வ.எண் 1. | இரத்து செய்ய வேண்டிய வரி விதிப்பு எண்கள் 2 | வரி விதிப்பு தாரரர் பெயர் மற்றும் முகவரி 3 | நிலுவைக் காலம் 4 | அரையாண்டு தொழில் வரித் தொகை (ரூ.) 5 | மொத்த நிலுவைத் தொகை ( ரூ.) 6 | வஜா ( Write Off) செய்ய வேண்டிய தொகை ரூ. 7 |
|---|---|---|---|---|---|---|
| 1, | 151/3045 | SBI | 1992–93 முதல் 2019-2020 | 938 | 50960 | 50960 |
| 2, | 151/3058 | Canara Bank | 1992–93 முதல் 2019-2020 | 938 | 50960 | 50960 |
| 3. | 151/3070 | IOB | 1992–93 முதல் 2019-2020 | 938 | 51760 | 51760 |

அ.கு - மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண்.1617</u>**

அனுமதிக்கப்படுகிறது.

7)நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுறுத்தலின்படி தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகராட்சி பகுதிகளில் பொது மக்கள் அதிகம் கூடும் பகுதிகளான நகராட்சி அலுவலகம், சந்தை சாலை, பேருந்து நிலையம், பேருந்து நிலைய கழிவறை பகுதி, பத்மனாபபுரம் அரண்மனை பகுதி (ம) குமாரகோவில் பகுதி ஆகிய இடங்களில் கை கழுவும் பகுதி (Wash Basin) அமைக்கவும் மற்றும் நகராட்சி அலுவலகத்திற்கு பொது மக்கள் நேரில் சென்று மனு செய்வதை தவிர்க்கும் பொருட்டு தொலைபேசி மூலமாகவும், மின்னஞ்சல் வாயிலாகவும் மனுக்கள் அளிக்க ஏதுவாக அலுவலக நுழைவு வாயிலில் அறிவிப்பு பலகை வைக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 27,000/- ஆகும்.

மேற்கண்ட பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் விதி எண்.15-ன் கீழ் செய்யவும் செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 301/2020/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1618**

**COVID-19 –சிறப்பு – அனுமதிக்கப்படுகிறது. வருவாய் நிதியிலிருந்து அவசரத்தினை முன்னிட்டு செலவு மேற்கொள்ளவும், எதிர்நோக்கும் அரசு நிதி கிடைக்கப் பெறும் போது சரிகட்டிடவும் தீர்மானிக்கப்பட்டது.**

8)தமிழக அரசின் ஆணைப்படி பத்மனாபபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் பத்மனாபபுரம் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயலாக்கத்திற்கு அரசாணை எண்.174 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24/11/2015-ன் படி ரூ. 1487 இலட்சம் மதிப்பீட்டிற்கு கீழ்கண்ட நிதி ஆதாரம் மூலமாக செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பத்மனாபபுரம் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை செயலாக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

| S.No. | Means of Finance | Amount (Rs. in Crore) |
|---|---|---|
| 1. | Loan from KFW assisted SMIF-TN-II-2 | 5.52 |
| 2. | Grant from PSGF under KIW assisted SMIF-TN-II-2 | 6.91 |
| 3. | ULB Contribution | 1.38 |
| | **Sub Total** | **13.81** |
| 4. | Proportionate O & M cost for one year as per DPR | 1.06 |
| | **Total Project Cost** | **14.87** |

அதன்படி மேற்கண்ட பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று அதற்கான செலவின அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திட்ட செயலாக்கத்திற்கு பத்மனாபபுரம் நகராட்சியின் செலவினம் ரூ. 5.42 கோடி (வரையில்) என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு தற்போது முதற்கட்டமாக ரூ. 1.42 கோடி திட்ட நிதியினை விடுவிக்க

வேண்டி மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி நிறுவனம் (TNUIFSL) அவர்களுக்கு அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்படி தொகை ரூ. 1.42 கோடி (0.71 நேரடி மான்யம் + 0.71 கோடி கடன்) விடுவிக்க கடன் சேவை இருப்பு நிதி (Debt Service Resolve Fund) ரூ.6.54 இலட்சம் கூட்டு வைப்பு தொகையாக செலுத்த TNUIFSL நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூ.6.54 இலட்சத்தினை கூட்டு வைப்பு தொகையாக செலுத்த நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து/ பொது நிதியிலிருந்து செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1619, நாள் 27/03/2020.</u>**

**கூட்டு வைப்புத் தொகை வருவாய் நிதியிலிருந்து செலுத்திட தீர்மானிக்கப்பட்டது.**

9) இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு

27/03/2020-ல் 4-வது முறையாக மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள எவரும் வரவில்லை.

1) தக்கலை பேட்டை தினசரி சந்தையில் விற்பனைக்காக கொண்டு வரப்படும் தலைசுமை சாமான்கள் வண்டிகள் லாறிகள் முதலியவைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
2) தக்கலை பேட்டை சந்தை அருகில் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
3) தக்கலை காமராஜர் பேருந்து நிலையத்தில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து ஒளிபரப்பும் உரிமம்.
4) தக்கலை காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம்வசூல் செய்யும் அனுபவ உரிமம்.

மேற்படி குத்தகை இனங்களுக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள எவரும் முன் வரவில்லை என்பதால் நகர் மன்ற தீர்மானம் எண்.1558, நாள் 31/10/2019-ல் ஒப்புதல் வழங்கியுள்ள கட்டண விபரப்படி உரிய கட்டண இரசீது அச்சடித்து துறை மூலம் வசூல் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மேலும் தற்போது கொரோனா தொற்று பரவி வருவதால் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பொது ஊரடங்கு 14/04/2020 வரை அமுலில் உள்ளதால் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சகம் தக்கலை 14/04/2020 வரை விடுமுறை விடப்பட்டுள்ளது எனபதால் அவசர அவசியம் கருதி உள்ளூர் தனியார் அச்சகங்களின் விலைப்புள்ளிகள் பெற்று மேற்படி இனங்களுக்கு கட்டண இரசீதுகள் அச்சடிக்கவும், அதற்கான

செலவீனத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1564/2019/அ1)

**மன்றத் தீர்மானம் எண்.1620**

மறு ஏல நடவடிக்கை தொடர ஏதுவான காலம் வரும் வரை திருத்திய நிரக்கில் துறை ரீதியாக வசூலித்திடவும், ரசீது புத்தகங்கள் அவசரத்தினை கருத்தில் கொண்டு தனியார் அச்சகத்தில் சிறப்பினமாக கருதி அச்சடித்திட அனுமதிக்கப்படுகிறது.

ஒப்பம்/–
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.